**கவனிக்க.-** *2018.07.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2081 - 2018 ජූලි මස 20 වැනි සිකුරාදා - 2018.07.20

*2081 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 136 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 137 |


**கவனிக்க.-** (i) *அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *மக்கள் வங்கி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

135-B81431-353 (2018/07)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## வெல்லவாய மாவட்ட நீதிமன்றம்

பிசுக்கால் ஏலத்தில் விற்பனை செய்தல்

கொழும்பு 02, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல. 75 இல் அமைந்துள்ள மக்கள் வங்கி

-முறைப்பாட்டாளர்-

வழக்கு இல. : எம். பி.- 47
எஸ்கீசி இல. : 05 எதிர் :

(1) விஜேகோன் முதியன்சேலாகே சத்தாதிஸ்ஸ பண்டார விஜேகோன்,
(2) குருபணா கமகே தயாவதீ அல்லது குருபணா கமகே தயாவதீ விஜேகோன்,
இல. 106, எத்திலிவெவ

-பிரதிவாதிகள் -

வெல்லவாய மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் 2017.07.24 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட/வழங்கப்பட்ட இணக்கத் தீர்ப்பின் பிரகாரம், MB 47 ஆம் இலக்க வழக்கு சார்பில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகளினால், 2017.07.24 ஆந் திகதிக்கு முறைப்பாட்டாளரான வங்கிக்குச் செலுத்த வேண்டியுள்ள மொத்தத் தொகை பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றி ஏழாயிரத்து எண்ணூற்றி அறுபத்தி நான்கு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 19,97,864.45) என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இணக்கமொன்றிற்கு அமைய இத் தொகையில் பத்தொன்பது இலட்சத்து எழுபதாயிரம் ரூபா (ரூ. 19,70,000.00) வை மட்டும் அறவிட்டுக் கொள்வதற்கும், இத் தொகையை 2017, ஓகத்து மாதம் ஆகக் குறைந்த மாதாந்த தவணைப் பணமாக இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 2,50,000.00) ரூபாவையும், 2017, செத்தெம்பர் மாதம் ஆகக் குறைந்த மாதாந்த தவணைப் பணமாக இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 2,50,000.00) ரூபாவையும் 02 தவணைகளிலும் எஞ்சிய தொகையை 2017, நவெம்பர் மாதம் தொடக்கம் மாதாந்தம் ரூபா இருபத்தோராயிரம் (ரூபா 21,000.00) வீதப்படி 70 தவணைகளிலும் என்றவாறு செலுத்துவதற்கு பிரதிவாதிகள் இணங்கியிருப்பினும், அக் குறித்த பணத்தைச் செலுத்துவதை பிரதிவாதிகள் தட்டிக்கழித்துள்ளதால், அப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக, இந் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள எஸ்கீசி கட்டளையின் பிரகாரம் தடை விதிக்கப்பட்டுள்ள இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் மீது அப் பிரதிவாதிகளுக்கு உரித்துடைய எல்லா உரித்துகளையும், உரிமைகளையும்,

2018 ஆம் வருடம் ஓகத்து மாதம் 16 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு, ஆதனம் அமைந்துள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென்பதை சகலருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில் (வெல்லவாய பிரதேச இறைவரி அலுவலர் பிரிவில்), வெல்லவாய கோறளை சிறு பிரிவில், வெஹெரயாய கிராம அலுவலர் பிரிவில், எத்திலிவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு, அவரது பொறுப்பில் இருக்கும் (Topo P. P. No. : 70) இடக்கிடப்பியல் ஆரம்ப வரைபட இல. 70 (வெளிக்களப் பத்திர இல. 44) இல் துண்டு இல. 2009 எனக் காட்டப்பட்ட, பூச்சியம் தசம் நான்கு ஏழு ஆறு ஹெக்டயார் (0.476 ஹெக்டயார்) விஸ்தீரணமுடையது எனக் கணிக்கப்பட்டுள்ள "எத்திலிவெவ யாய" என அழைக்கப்படுகின்ற கீழ்க் காட்டப்பட்ட எல்லைகளை உடைய அரசாங்கக் காணித்துண்டு: வடக்கு : துண்டு இல. 2008 ஐயும்; கிழக்கு : துண்டு இல. 2010 ஐயும்; தெற்கு : துண்டு இல. 2011 ஐயும்; மேற்கு : துண்டு இல. 2007 ஐயும் எல்லைகளாகக் கொண்டது.

மேற்சொன்ன எல்லைகளுள் அமைந்த கட்டிடங்கள், பயிர்கள், செடி, கொடிகள் உள்ளிட்ட அனைத்தும் அடங்கும்.

மேற்சொன்ன காணி, மொனறாகலை மாவட்ட காணிப் பதிவு அலுவலகத்தில் LDO/M11/2 எனும் ஏட்டு ஓலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

டி. எம். சியாமா திசாநாயக்க,
பதிவாளர்/பிரதி பிசுக்கால் உத்தியோகத்தர்,
மாவட்ட நீதிமன்றம், வெல்லவாய.

மாவட்ட நீதிமன்றம்,
வெல்லவாய,
2018, யூன் 22.

7-601

# நானாவித அறிவித்தல்கள்

## குளோபல் பிஸ் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஞானமுத்து ஸ்ரீநேசன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 52 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "குளோபல் பிஸ் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் பல்லின சமூகங்களிடையே இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(ஆ) சிறுவர், இளைஞர் மற்றும் முதியோரின் பொருட்டு கல்வி ரீதியானதும் தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்திப் பயிற்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி அத்துடன் கல்விரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஊக்குவித்தல்;

(இ) இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சமுதாய ரீதியான பிணக்குகள் காரணமாக இடம்பெயர்ந்த சமூகத்தினரை இனங்கண்டு அவர்களுக்கான உதவிகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும்,

பிறவும்.

ஞானமுத்து ஸ்ரீநேசன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

7 - 687